**IHP**
INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5   Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk  web: www.ihp.lk  twitter: @ihplk

**PRESS RELEASE**

**திகதி வரை தடையாணை**

திகதி : 26 January 2024
நேரம் : 12:01 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at’ ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk  Twitter: @raviranna neliya


# டிசம்பர் ’23ல், என்.பி.பி./ஜே.வி.பி. வயது வந்தவர்கள் மத்தியில் 39% உடன் எஸ்.ஜே.பி.(27%) மற்றும் எஸ்.எல்.பி.பி.யைவிட(10%) முன்னிலையில்

## *IHP MRP டிசம்பர் 2023 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) சமீபத்திய திருத்தப்பட்ட MRP மாதிரியின் (01/2024 திருத்தப்பட்டது ) மதிப்பீடுகள், என்.பி.பி./ஜே.வி.பி. 39% வயது வந்த(18 வயதிற்கு மேற்பட்டவர்) இலங்கையர்களுடன் டிசம்பர் 2023 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானத்தில் முன்னணியை தக்க வைத்துள்ளதை காட்டுகின்றன. இது 27% உடைய எஸ்.ஜே.பி, 10% உடைய எஸ்.எல்.பி.பி., 6% உடைய யூ.என்.பி. மற்றும் தலா 3% உடைய ஐ.டி.ஏ.கே மற்றும் ஸ்ரீ. ல. மு. க. வை விட குறிப்பிடத்தக்க முன்னிலை. டிசம்பர் மதிப்பீடுகள் தற்காலிகமானவை மேலும் நான்கு முன்னிலை கட்சிகளுக்கும் பிழை விளிம்பு 2.0 – 3.5%.




என்.பி.பி./ஜே.வி.பி.யின் தற்போதைய முன்னணியானது, 2022ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து அவர்களுக்கான ஆதரவு தொடர்ந்து அதிகரித்ததின் அடிப்படையில் என்பதை திருத்தப்பட்ட IHP SLOTS மாதிரியின் மதிப்பீடுகள் மேலும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இரண்டாம் இடத்தில் உள்ள எஸ்.ஜே.பி.யும் தனது ஆதரவை அதிகரித்துள்ளது, ஆனால் சற்று மெதுவாக. டிசம்பர் 2023 மதிப்பீடுகள், ஜூலை 2023 முதல் யூ.என்.பி.க்கு ஆதரவு குறைந்திருப்பதோடு எஸ்.எல்.பி.பி ஆதரவு நிலையாக உள்ளதை உறுதிப்படுத்துகிறது.




இந்த முடிவுகள், மாதாந்திர மாற்றங்களை சீராக்குதல் மற்றும் மாதிரி இரைச்சல் காரணமாக ஏற்படக்கூடிய மாதாந்திர ஏற்ற இறக்கங்களைக் குறைக்கும் நோக்கத்தோடு முக்கிய திருத்தம் செய்யப்பட்ட IHP SLOTS MRP மாதிரியின் அடிப்படையில் கணிக்கப்பட்டவை. வாக்களிக்கக்கூடியவர்களின் வாக்காளர் தீர்மானத்தை மட்டும் முன்னிலைப்படுத்திய முந்தைய மாதங்களைப் போல் அல்லாமல், இந்த மதிப்பீடுகள் வயது வந்தவர்கள் அனைவரையும் உள்ளடக்கும். IHP தனது வாக்காளர் மாதிரியை மேம்படுத்துவதில் செயல்பட்டு வருகிறது, மேலும் எதிர்கால புதுப்பிப்பில் வாக்களிக்கக்கூடியவர்களின் வாக்காளர்

தீர்மானத்தை வெளியிடுவதை மீண்டும் தொடரும். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் பெரும்பாலான மதிப்பீடுகளில், வயது வந்தவர்கள் மற்றும் வாக்களிக்ககூடியவர்களுக்கிடையே வாக்காளர் தீர்மானத்தில் உள்ள வேறுபாடுகள் பொதுவாக 1-2%ஆக இருந்ததைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த டிசம்பர் 2023 புதுபிப்பு அக்டோ. 2021 முதல் இலங்கையில் வயது வந்தவர்களிடையே நடத்தப்பட்ட 14,941 நேர்காணல்களின் அடிப்படையில். 522 நேர்காணல்கள் டிச. 2023ல் நடத்தப்பட்டன. IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்கள் மற்றும் அவர்களின் கருத்துக்களைப் – இவ்விடத்தில், “இன்று பொதுதேர்தல் நடந்தால் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள் ” – பற்றிய பலவகையான குணாதிசயங்களுக்கிடையேயான தொடர்பை பல அடுக்கு புள்ளியியல் மாதிரியின் மூலம் முதலில் மதிப்பிடுகிறது. அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு அளவீடு செய்யப்பட்ட ஒரு பெரிய தரவு கோப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி பல அடுக்கு மாதிரி கூறுவதை வைத்து, அக்டோ. 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது. மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும் பிழை விளிம்புகளைப் பெறவும் பலஅடுக்கு மாதிரி 100 முறை மதிப்பிடப்பட்டது.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, March 2023, “IHP MRP Voting Intentions Estimates February 2023. Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf*

Institute for Health Policy, April 2023, “Little change in voting preferences in March, with NPP/JVP maintaining a clear lead over SJB, amidst possible signs of a UNP rise. IHP MRP General Election voting intentions update March 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230419.pdf*

Institute for Health Policy, May 2023, “NPP/JVP maintains a lead, but loses support to UNP and other parties, whilst SJB flatlines. IHP MRP General Election voting intentions update April 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230525.pdf*

Institute for Health Policy, June 2023, “NPP/JVP support fell to 23% behind SJB on 26%, whilst support for UNP and SLPP rises amongst likely voters during May 2023. IHP MRP General Election voting intentions update May 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease202306301.pdf*

Institute for Health Policy, July 2023, “Support for NPP/JVP and SJB fell, with evidence of growing vote disillusionment with all established parties in June 2023. IHP MRP General Election voting intentions update June 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230727.pdf*

Institute for Health Policy, August 2023, “Support for major parties changes little in July, with NPP/JVP and SJB ahead, but large numbers of voters uncommitted. IHP MRP General Election voting intentions update July 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230821.pdf*

Institute for Health Policy, September 2023, “NPP/JVP retain an edge over the SJB amongst voters in August. IHP MRP General Election voting intentions update August 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230925.pdf*

Institute for Health Policy, October 2023, “NPP/JVP leads with 42% of likely voters, ahead of the SJB (22%) and UNP (13%) in September. IHP MRP General Election voting intentions update September 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231023.pdf*

Institute for Health Policy, November 2023, “Little change in voter intentions in October, with NPP/JVP consolidating its lead at 40%. IHP MRP General Election voting intentions update October 2023”.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231123.pdf*

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை விவரங்கள்**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression மற்றும் Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

டிசம்பர் 2023க்கான MRP மதிப்பீடுகள் டிசம்பர் 2023 ல் நடத்தப்பட்ட 522 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- ஜனவரி 7 2024 வரை நடத்தப்பட்ட 14,941 ஒட்டுமொத்த நேர்காணல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி., யூ.என்.பி., எஸ்.எல்.பி.பி., எஸ்.எல்.எப்.பி., ஐ.டி.ஏ.கே., எஸ். எல்.எம்.சி., மற்றும் இ.தொ.க.விற்கு பிழை விளிம்பு 0.8–3.4% என்றும் “மற்றவர்களுக்கு” 4% என்றும் மதிப்பிடப்பட்டது. டிசம்பர் மாத புதுப்பிப்பு, திருத்தப்பட்ட மாதிரியை பயன்படுத்துவதால் மதிப்பீடுகள் முந்தைய மதிப்பீடுகளில் இருந்து சிறிது மாறுபடுவன. பிழை விளிம்பை கணிப்பதற்கு மதிப்பீட்டில் 100 சீரற்ற உருவகப்படுத்துதல்கள் பயன்படுத்தப்பட்டன.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கான நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் எண்ணங்கள் மற்றும் கருத்துக்ககளை பிரதிப்பன அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.